සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

කර්ණාටක සංගීතය I
கர்நாடக சங்கீதம் I
Carnatic Music I

55 T I

පැය දෙකයි
இரண்டு மணித்தியாலம்
Two hours

**அறிவுறுத்தல்கள் :**

* **எல்லா** வினாக்களுக்கும் விடை எழுதுக.
* விடைத்தாளில் தரப்பட்டுள்ள இடத்தில் உமது **சுட்டெண்ணை** எழுதுக.
* விடைத்தாளின் மறுபக்கத்தில் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களைக் கவனமாக வாசித்துப் பின்பற்றுக.
* **1** தொடக்கம் **50** வரையுள்ள வினாக்கள் ஒவ்வொன்றுக்கும் (1), (2), (3), (4), (5) என இலக்கமிடப்பட்ட விடைகளில் **சரியான** அல்லது **மிகப் பொருத்தமான** விடையைத் தெரிந்தெடுத்து, **அதனைக் குறித்து நிற்கும் இலக்கத்தைத் தரப்பட்டுள்ள அறிவுறுத்தல்களுக்கு அமைய** விடைத்தாளில் **புள்ளடி** (×) இடுவதன் மூலம் காட்டுக.

1. "நீ போய் அழைத்து வாடி...." எனும் பதம் அமைந்த இராகத்தின் மேள எண்
   (1) 15 (2) 22 (3) 28 (4) 29 (5) 65

2. பெரியபுராணம் பாடப்படும் இராகத்திற்கு இணையான பண்
   (1) செவ்வழி (2) சாதாரி (3) தக்கேசி
   (4) செந்துருத்தி (5) பழம்பஞ்சுரம்

3. 'ராதாவதன' எனத் தொடங்கும் அஷ்டபதி அமைந்துள்ள இராகத்தின் தாய் இராகம்
   (1) கரஹரப்ரியா (2) கல்யாணி (3) பந்துவராளி
   (4) சூரியகாந்தம் (5) சங்கராபரணம்

4. திருத்தாண்டகப் பாடலகள் அடங்குவது
   (1) இரண்டாம் திருமுறையில் (2) மூன்றாம் திருமுறையில் (3) நான்காம் திருமுறையில்
   (4) ஐந்தாம் திருமுறையில் (5) ஆறாம் திருமுறையில்

5. நாட்டார் பாடல்களை இசைப்பதற்கு மிகப் பொருத்தமான தாளம்
   (1) துருவ தாளம் (2) சாபு தாளம் (3) ஸிம்ஹநந்தன தாளம்
   (4) சரபநந்தன தாளம் (5) தேசாதி தாளம்

6. ஸ்வரங்கள், வார்த்தைகள், ஜதிகள் என்பவற்றை சரணத்தில் கொண்டமைந்த உருப்படி
   (1) அஷ்டபதி (2) ஜதீஸ்வரம் (3) ஜாவளி (4) தில்லானா (5) திருப்புகழ்

7. 'வலசி வச்சி' எனத் தொடங்கும் நவராகமாலிகா வர்ணத்தில் பிரதிமத்திம இராகப் பிரயோகம் இடம்பெறுவது
   (1) சரணத்தில் (2) முக்தாயிஸ்வரத்தில் (3) அனுபல்லவியில்
   (4) பல்லவியில் (5) சரணஸ்வரத்தில்

8. ஆரோஹண - அவரோஹணங்களில் அன்னிய ஸ்வரம் ஒலிக்காமல் சஞ்சாரங்களில் மட்டும் அன்னியஸ்வரம் ஒலிக்கும் இராகம்
   (1) முகாரி (2) சாரங்கா (3) காம்போதி (4) பைரவி (5) காபி

9. பின்வருவோருள் திருப்புகழுக்கு உரை எழுதியவர்
   (1) பரிமேலழகர் (2) செங்கல்வராயப்பிள்ளை (3) குமரகுருபரர்
   (4) வெள்ளைவாரணன் (5) அருணகிரிநாதர்

tamilguru.lk

**10.** 'ஆரபிமானம்...' எனத் தொடங்கும் இராகமாலிகையில் இடம்பெறும் இராகங்களுள் அன்னியஸ்வரத்தினைக் கொண்ட பிரதிமத்திம இராகம்,
(1) சாமா (2) கல்யாணி (3) பூர்விகல்யாணி
(4) கமலாமனோஹரி (5) சாரங்கா

**11.**

| 1 | 2 | 3 | 4 | 5 | 6 | 7 | 8 | 9 | 10 |
|---|---|---|---|---|---|---|---|---|---|
| DHI | NA | DHI | DHI | NA | TI | NA | DHI | DHI | NA |
| தி | னா | தி | தி | னா | தி | னா | தி | தி | னா |
| X | | 2 | | | 0 | | 3 | | |

மேலே குறிப்பிட்டுள்ள டேக்காவைக் குறிக்கும் ஹிந்துஸ்தானி தாள வகை
(1) திரிதால் (2) தாதரா (3) தீப்சந்தி (4) ஜப்தால் (5) ஸம்

**12.** இராகபாவம், பொருள்நயம், தாளஞானம் போன்றவை வெளிப்படும்படியாகப் பாடப்படும் மனோதர்ம செயன்முறை
(1) தானம் பாடுதல் (2) நிரவல் பாடுதல்
(3) இராக ஆலாபனை செய்தல் (4) கற்பனாஸ்வரம் பாடுதல்
(5) தனி ஆவர்த்தனம்

**13.** புறநீர்மைப் பண்ணில் இசைக்கத்தக்க திருவாசகப் பாடல்வகை
(1) திருவம்மானை (2) அச்சோப்பதிகம் (3) திருவெம்பாவை
(4) திருச்சாழல் (5) சிவபுராணம்

**14.** தாளத்தின் எல்லா அங்கங்களும் கிரமம் தவறிக் குறுகியும் நீண்டும் வரும் அமைப்பைக் கொண்ட யதி
(1) சமயதி (2) மிருதங்கயதி (3) கோபுச்சயதி
(4) வேதமத்திமயதி (5) விஷமயதி

**15.** இசைக்கருவிகளின் பிரிவுகள் தொடர்பாக முதன்முதலில் குறிப்பிடும் நூல்
(1) நாட்டிய சாஸ்திரம் (2) சங்கீதரத்னாகரம் (3) சங்கிரக சூடாமணி
(4) சங்கீத சுதாகரம் (5) கருணாமிருதசாகரம்

**16.** வீணையில் காணப்படும் தந்திகளை விட கோட்டு வாத்தியத்தில் மேலதிகமாகக் காணப்படும் பிரதான பாட்டுத் தந்தி
(1) பக்க பஞ்சமம் (2) பஞ்சமம் (3) பக்க ஸாரணி
(4) ஸாரணி (5) ஹெச்சு ஸாரணி

**17.** பின்வருவனவற்றுள் பல்லவியில் மத்திமகால ஸாஹித்யம் இடம்பெறும் உருப்படி
(1) "ஆடிக்கொண்டார்..." மாயாமாளவகௌளை - ஆதி
(2) "ஸ்ரீ ஸரஸ்வதி..." ஆரபி - ரூபகம்
(3) "யோசனகமல..." தர்பார் - ஆதி
(4) "காமாட்சி காமகோடி..." சிம்மேந்திரமத்யமம் - ரூபகம்
(5) "ஓஜகதம்பா..." ஆனந்தபைரவி - ஆதி

**18.** மஹாவைத்தியநாதய்யரது 'கௌரி நாயக' எனும் தில்லானா அமைந்த தாளம்
(1) ரூபக தாளம் (2) ஆதி தாளம் (3) கண்டசாபு தாளம்
(4) ஜம்பை தாளம் (5) ஸிம்ஹநந்தன தாளம்

**19.** ஒரு இராகத்தில், ஒரு ஸ்வரத்தைச் சொல்லி அடுத்த ஸ்வரத்தை விட்டு அதற்கு அடுத்த ஸ்வரத்தைச் சொல்வது
(1) வின்னியாசம் (2) மந்தரம் (3) லங்கனம்
(4) பஹுத்துவம் (5) சன்னியாசம்

[பக். 3 ஐப் பார்க்க




අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

**20.** ‘ஆபோஹி’ இராகத்தின் ஸ்வரஸ்தானங்களுடன் எந்த ஸ்வரஸ்தானத்தைச் சேர்த்தால் ஸ்ரீரஞ்சனி இராகம் உண்டாகும்?

(1) சதுஸ்ருதி தைவதம் (2) சாதாரண காந்தாரம் (3) சுத்த மத்திமம்
(4) கைஷிகி நிஷாதம் (5) பஞ்சமம்

003220

- **21, 22** ஆகிய வினாக்களுக்கு விடையளிப்பதற்குக் கீழே தரப்பட்டுள்ள ஸ்வரப்பலகையின் படத்தினைப் பயன்படுத்துக.




**21.** மேற்குறித்த ஸ்வரப்பலகையில் புள்ளடியினால் ⊗ குறிக்கப்பட்ட ஸ்வரஸ்தானங்களைக் கொண்ட இராகம்

(1) ஹம்ஸத்வனி (2) மோகனம் (3) ஆபோஹி
(4) சுத்தஸாவேரி (5) பூபாளம்

**22.** ‘வரவீணா...’ எனத் தொடங்கும் கீதத்தில் இடம்பெறும் ‘சனு-ராணி’ எனும் சாஹித்தியப் பகுதியினை வாசிப்பதற்கு அழுத்தவேண்டிய ஸ்வரக் கட்டைகள்

(1) A G E E D (2) A G F F E (3) B A F F E
(4) B G D D C (5) B F E E D

**23.** ‘ஆரூரானை மறக்கலுமாமே’ என நிறைவுறும் தேவாரத்தின் பண்ணிற்கு ஒப்பான இராகத்தின் ஆரோஹண-அவரோஹணம் முறையே

(1) ஸரிமபதஸ் - ஸ்நிதபமகரிஸ (2) ஸரிகபதஸ் - ஸ்நிதபமகரிஸ
(3) ஸரிகமபதஸ் - ஸ்நிதபமகரிஸ (4) ஸகமபநிஸ் - ஸ்நிபமகஸ
(5) ஸரிகமதஸ் - ஸ்தமகரிஸ

**24.** கர்நாடக இசையில் நாதஸ்வரத்திற்கு ஒப்பான மேலைத்தேய வாத்தியம்

(1) முகவீணை (2) சாக்ஸபோன் (3) புல்லாங்குழல்
(4) கிளாரினெட் (5) டிரம்பட்

**25.** ‘பூர்வபாஜ்’ எனும் பாணியில் வாசிக்கப்படும் வாத்தியம்

(1) தபேலா (2) ஸாரங்கி (3) ஸித்தார்
(4) ஸரோட் (5) ஷெனாய்

**26.** ஹிந்துஸ்தானி இசையில் இருந்து கர்நாடக இசைக்கு வந்த தாளம்

(1) ஆதி தாளம் (2) தேசாதி தாளம் (3) திரிபுடை தாளம்
(4) மத்யாதி தாளம் (5) சாபு தாளம்

**27.** நாட்டுக் கூத்தினை 3 மணித்தியாலங்களாக குறுகிய காலத்தில் மேடையேற்றும் நவீன முறையினை அறிமுகப்படுத்தியவர்

(1) பேராசிரியர் கைலாசபதி (2) பேராசிரியர் சிவத்தம்பி (3) பேராசிரியர் சிவசாமி
(4) பேராசிரியர் சு. வித்தியானந்தன் (5) பேராசிரியர் சி. மௌனகுரு

**28.** கவிக்குஞ்சரபாரதியாரால் இயற்றப்பட்ட நாடகப்பாடல் வகை

(1) காவடிச்சிந்து (2) கீதகோவிந்தம் (3) நந்தனார் சரித்திரம்
(4) இராமநாடகக் கீர்த்தனைகள் (5) அழகர் குறவஞ்சி

[பக். 4 ஐப் பார்க்க

29. 20 ஆவது மேளத்தின் ஜன்னியமான ஸரிகமபதநிஸ - ஸ்நிதமகஸ எனும் ஆரோஹணஅவரோஹணத்தையுடைய இராகம்
(1) ஸாவேரி (2) நாட்டைக்குறிஞ்சி (3) ஸாரமதி
(4) கருடத்வனி (5) ஜகன்மோஹினி

30. வராளி ஒரு
(1) ஜனக இராகம் (2) கனபஞ்சக இராகம்
(3) பாஷாங்க இராகம் (4) சுத்தமத்திம இராகம்
(5) திவிதீய கனபஞ்சக இராகம்

31. ஹிந்துஸ்தானி சங்கீதத்தை முதன்முதலாக ஸ்டாவ் நொடேஷன் முறையில் எழுதியவர்
(1) தான்சேன் (2) பண்டிட்ராம் நாராயணன்
(3) டாக்டர் ராஜாசேர் சுரேந்திரமோகன டாகூர் (4) ரவீந்திரநாத் தாகூர்
(5) உஸ்தாத் ஸாகிர் ஹுசைன்

32. வசந்தா இராகத்தில் ஆரோஹணத்தில் இடம்பெறாது அவரோஹணத்தில் இடம்பெறும் ஸ்வரம்
(1) காந்தாரம் (2) மத்திமம் (3) பஞ்சமம்
(4) ரிஷபம் (5) தைவதம்

33. 'கோபிகா மனோஹரம்......' எனத் தொடங்கும் மோகனராகக் கீர்த்தனையில் இடம்பெறும் முத்திரை
(1) வெங்கடேஸ (2) குருகுஹ (3) பங்கஜநாப (4) ஸ்ரீனிவாஸ (5) ராமதாஸ

34. கடபஜாதி ஸங்க்யை என்ற விதிக்குப் புறம்பாக அமைந்துள்ள இராகங்களில் ஒன்று
(1) சக்ரவாகம் (2) ஷண்முகப்பிரியா (3) தீரசங்கராபரணம்
(4) கீரவாணி (5) தர்மவதி

35. 'ஸாபாஸா' எனும் பிரயோகத்தினால் அழகுபெறும் இராகம்
(1) வசந்தா (2) நடபைரவி (3) ஷண்முகப்பிரியா
(4) கரஹரப்பிரியா (5) ஆனந்தபைரவி

36. 'நெரநம்மி...' எனும் அடதாள வர்ணத்தில் வாக்கேயகார முத்திரை இடம்பெறும் பகுதி - முத்திரை என்பன முறையே
(1) பல்லவி - நீரஜநயன (2) பல்லவி - ஸுந்தர
(3) அனுபல்லவி - ஸ்ரீநிவாஸ (4) அனுபல்லவி - ஸமயமுரா
(5) சரணம் - ஸரஸுட

37. எம்.எஸ். சுப்புலட்சுமி அவர்களுக்கு 'மக்சாசாய்' எனும் உயர் விருதை வழங்கிய நாடு
(1) பாகிஸ்தான் (2) பிலிப்பைன்ஸ் (3) ஜப்பான்
(4) சீனா (5) இந்தியா

38. ஹிந்துஸ்தானி இசையில் 'பைரவ்' எனும் இராகம் பாடப்படும் பருவகாலம்
(1) முன்பனிகாலம் (2) மாரிகாலம் (3) இலையுதிர்காலம்
(4) கோடைகாலம் (5) வசந்தகாலம்

39. ஐந்து விரல்களையும் பயன்படுத்தி இசைக்கருவிகளை வாசிக்கும் முறையை அறிமுகப்படுத்தியவர்
(1) மொஸாட் (2) பாக் (3) பீதோவன்
(4) ஹேடன் (5) கொட் - லொப் - நீவ்

40. பின்வரும் இராகங்களுள் ஏகசுருதி தைவத ஸ்வரத்தினால் சிறப்பிக்கப்படும் இராகம்
(1) ஆபோஹி (2) ஷண்முகப்பிரியா (3) கமாஸ்
(4) ஆனந்தபைரவி (5) ஸாவேரி

41. கர்நாடக இசையில் விளம்பித லயத்திற்கு இணையாக மேலைத்தேய இசையில் வழங்கும் பெயர்
(1) Slow Tempo (2) Medium Tempo (3) Fast Tempo
(4) Allegro (5) Allegro Moderato

[பக். 5 ஐப் பார்க்க



අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාල ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



**42.** "முரளி வீணாகான விநோதினி" என்ற பாடல் வரி இடம்பெறும் கீர்த்தனை
(1) 'தேவி நீயே துணை...' (2) 'ஞானம் அருள்வாய்...' (3) 'காமாட்சி காமகோடி...'
(4) 'பார்வதி நாயகனே...' (5) 'சரஸ்வதி விதியுவதி...'

**43.** இலங்கையில், கல்லினால் செய்யப்பட்ட துளைவாத்தியம் வாசிக்கப்பட்டதாகக் கூறப்படும் இடம்
(1) மாவிட்டபுரம் (2) கந்தரோடை (3) நயினாதீவு
(4) மட்டக்களப்பு (5) திருகோணமலை

**44.** வீணை பாலச்சந்தரின் இசைத்தட்டுகளில் (ரிகார்டுகளில்) அவருடன் இணைந்து தீக்ஷிதரின் நவக்ரக கிருதிகளை பாடி வாசித்தவர்
(1) ஆர்.எஸ். ஜெயலக்ஷ்மி (2) ஜெயந்தி குமரேஷ் (3) சிட்டிபாபு
(4) காயத்ரி நாராயணன் (5) காரைக்குடி சாம்பசிவ ஐயர்

**45.** தொகுதிக் கீர்த்தனைகளுக்கு முன்னோடியாக இருந்த பதிகங்களுள் ஒன்று
(1) திருப்பொன்னூசல் (2) திருத்தொண்டர்தொகை (3) திருப்பல்லாண்டு
(4) திருவிராகம் (5) திருநேரிசை

**46.** 20ஆம் நூற்றாண்டில் தெலுங்கு மொழியில் வர்ணங்கள், கீர்த்தனைகள், பிரபந்தங்கள் முதலியவற்றை இயற்றிய வாக்கேயகாரர்
(1) தியாகராஜர் (2) கோடீஸ்வர ஐயர்
(3) வீணை வரதய்யா (4) தஞ்சை பொன்னையாப்பிள்ளை
(5) மகாவைத்தியநாதய்யர்

**47.** 1965ஆம் ஆண்டு அகில இலங்கை சங்கீத வித்துவ சபையினால் 'சங்கீதவித்துவமணி' என்ற பட்டம் வழங்கி கௌரவிக்கப்பட்ட இலங்கைக் கலைஞர்
(1) பி.எஸ். ஆறுமுகம் (2) என். சண்முகரத்தினம்
(3) வி. தட்சிணாமூர்த்தி (4) எஸ்.எஸ். உருத்திராபதி
(5) பிரம்மஸ்ரீ.ம.த.ந. வீரமணி ஐயர்

**48.** பியானோ வாத்தியத்திலுள்ள இடதுபக்கப் பெடலின் செயற்பாடு
(1) மென்மையான ஒலியை உண்டாக்குதல் (2) பலமான ஒலியை உண்டாக்குதல்
(3) ஒலியை நிறுத்துதல் (4) நீண்ட ஒலியை உண்டாக்குதல்
(5) ஒலியின் சுருதியை மாற்றுதல்

**49.** ஸரோட், ஸிதார் இசை நிகழ்ச்சியை இரசித்து விமர்சிப்பதற்கு கருத்திற்கொள்ள வேண்டிய மிக முக்கியமான விடயம்
(1) இசைக்கருவியின் அமைப்புப் பற்றி அறிதல்
(2) இசைக்கலைஞர்கள் பற்றிய விபரங்களை அறிதல்
(3) இசை நிகழ்ச்சியின் மேடை அலங்காரங்களை அறிதல்
(4) இசை நிகழ்ச்சியின் தரம், தன்மை வாசிக்கும் முறை பற்றி அறிதல்
(5) இசை நிகழ்ச்சியின் ஒலி, ஒளி அமைப்புப் பற்றி அறிதல்

**50.** பின்வரும் கூற்றுகளுள் மனோதர்ம இசைக்குப் **பொருத்தமற்ற** கூற்றுகளைக் கொண்ட தொகுதியைத் தெரிவுசெய்க.
A - இராக ஆலாபனை பாடுதல்
B - கற்பனாஸ்வரங்களை மனனம் செய்து பாடுதல்
C - இசை உருப்படிகளைப் பாடுதல்
D - பாடகரின் கற்பனைத்திறன் வெளிப்படுதல்
E - பல்லவி பாடுதல்

(1) A, E (2) A, D (3) C, D (4) B, D (5) B, C

* * *

PAST PAPERS WIKI

සියලු ම හිමිකම් ඇවිරිණි / முழுப் பதிப்புரிமையுடையது / All Rights Reserved]

නව නිර්දේශය/புதிய பாடத்திட்டம்/New Syllabus

NEW

ශ්‍රී ලංකා විභාග දෙපාර්තමේන්තුව
இலங்கைப் பரீட்சைத் திணைக்களம்
Department of Examinations, Sri Lanka

අධ්‍යයන පොදු සහතික පත්‍ර (උසස් පෙළ) විභාගය, 2020
கல்விப் பொதுத் தராதரப் பத்திர (உயர் தர)ப் பரீட்சை, 2020
General Certificate of Education (Adv. Level) Examination, 2020

කර්ණාටක සංගීතය II
கர்நாடக சங்கீதம் II
Carnatic Music II

55 T II

පැය තුනයි
மூன்று மணித்தியாலம்
Three hours

අමතර කියවීම් කාලය - මිනිත්තු 10 යි
மேலதிக வாசிப்பு நேரம் - 10 நிமிடங்கள்
Additional Reading Time - 10 minutes

வினாப்பத்திரத்தை வாசித்து, வினாக்களைத் தெரிவுசெய்வதற்கும் விடை எழுதும்போது முன்னுரிமை வழங்கும் வினாக்களை ஒழுங்கமைத்துக் கொள்வதற்கும் மேலதிக வாசிப்பு நேரத்தைப் பயன்படுத்துக.

**அறிவுறுத்தல்கள் :**

※ 'அ' பகுதியில் உள்ள எல்லா வினாக்களுக்கும் 'ஆ' பகுதியில் இருந்து ஒரு வினாவிற்கும் 'இ' பகுதியில் இருந்து **மூன்று** வினாக்களுக்குமாக மொத்தம் **ஐந்து** வினாக்களுக்கு விடை தருக.

## 'அ' பகுதி

1. (i) 'நாதம்' எனும் மாதாந்த இதழினை வெளியிட்டவர் யார்?

(ii) தாலாட்டுப் பாடல்கள், ஊஞ்சற் பாடல்கள் ஆகியவற்றைப் பாடுவதற்கு ஏற்ற இராகம் யாது?

(iii) 72 மேளகர்த்தா இராகங்களில் கீர்த்தனைகளை இயற்றியவர் யார்?

(iv) ஸரிகமபதநீ - ரிகமபதநிஸ்ா- கமபதநிஸ்ரீ எனும் ஸ்வரக்கோர்வையில் பயன்படுத்தப்பட்டுள்ள கமகம் யாது?

(v) "ஆவின மெலாம்...." எனத் தொடங்கும் பௌளி இராக சூளாதி அமைந்துள்ள தாளம் யாது?

(vi) பாடலொன்றில் ஒரு சொல் ஒன்றுக்கு மேற்பட்ட பொருளுடன் இடம்பெறும் அணி யாது?

(vii) வேங்கடமகியால் ஸ்வரதாளக்குறிப்புடன் இயற்றப்பட்ட கீர்த்தனைகள் காணப்படும் நூல் யாது?

(viii) இலங்கை இசை வரலாற்றில் கிறிஸ்தவ கீதங்களையும் கிறிஸ்தவ நாடகங்களையும் எழுதியவரைப் பெயரிடுக.

(ix) ஸட்ஜம், சுத்தரிஷபம், அந்தரகாந்தாரம், பிரதிமத்யமம், பஞ்சமம், சதுஸ்ருதி தைவதம், காகலிநிஷாதம் ஆகிய ஸ்வரஸ்தானங்களை எடுத்துக்கொள்ளும் இராகம் யாது?

(x) அமிர்குஸ்ருவினால் அறிமுகப்படுத்தப்பட்ட தாளங்களுள் ஒன்றினைப் பெயரிடுக.

(xi) தேவார வைப்புமுறை **இரண்டினைத்** தருக.

(xii) பஹுத்வனி வாத்தியங்கள் **இரண்டின்** பெயர்களைக் குறிப்பிடுக.

(xiii) ஸ்வாதித்திருநாள் மகாராஜா எழுதிய ஹரிகதைகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(xiv) சிறுதெய்வ வழிபாட்டுச் சடங்குகளில் இடம்பெறும் கிராமிய இசைமரபுகள் **இரண்டினைப்** பெயரிடுக.

(xv) அப்பர் பாடிய தேவாரப் பாடல்களில் இடம்பெறும் பாவினங்கள் **இரண்டினைத்** தருக.

(20 புள்ளிகள்)

[பக். 2 ஐப் பார்க்க

අ.පො.ස උසස් පෙළ සියලුම විෂයන්ට අදාළ ප්‍රශ්න පත්‍ර/පිළිතුරු පත්‍ර/සටහන් ලබා ගැනීමට Past Papers Wiki වෙත පිවිසෙන්න

Past Papers Wiki



## 'ஆ' பகுதி

**2.** (i) ஸப்த தாளங்கள் பஞ்சகதி பேதங்களினால் 35 தாளங்களாகும் முறையினை விளக்குக.(03 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் குறிப்பிட்ட முறையினை மட்டியதாளத்தை உதாரணமாகக் கொண்டு அட்டவணைப்படுத்துக. (05 புள்ளிகள்)

(iii) 35 சூளாதி தாளங்களும் கதி பேதங்களினால் 175 தாளங்களாகும் முறையினை ஜம்பை தாளம், அடதாளம் ஆகிய தாளங்களை உதாரணங்களாகக் கொண்டு அட்டவணையுடன் விளக்குக. (12 புள்ளிகள்)

**3.** பின்வரும் இசை உருப்படிகளுள் **இரண்டினைத்** தெரிவுசெய்து அவற்றினை விளக்குக.

(i) ஜாவளி

(ii) முதல் ஏழு திருமுறைகள் அடங்கும் பாடல் வகை

(iii) சூளாதி (2 × 10 = 20 புள்ளிகள்)

## 'இ' பகுதி

**4.** பாடத்திட்டத்திற்கமைவாக நீர் கற்ற அடதாள வர்ணத்தின் பூர்வாங்கப் பகுதியினை ஸ்வர ஸாஹித்ய தாள இசைக் குறியீடுகளுடன் எழுதுக. (இராகம், தாளம், ஆரோஹணம், அவரோஹணம், இயற்றியவர் பெயர் ஆகியன குறிப்பிடப்படல் வேண்டும்.) (20 புள்ளிகள்)

**5.** அருணகிரிநாதர் சைவசமயத்திற்கு மாத்திரமன்றி இசைக்கும் அளப்பெரும் தொண்டாற்றியுள்ளார். இவர் தொடர்பாக வினவப்படும் பின்வரும் வினாக்களுக்கு விடையளிக்குக.

(i) அருணகிரிநாதருக்கு வழங்கப்பட்ட சிறப்புப் பெயர்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(ii) அவர் இயற்றிய நூல்கள் **மூன்றினைக்** குறிப்பிடுக. (03 புள்ளிகள்)

(iii) அவரின் வாழ்க்கை வரலாற்றினை விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) அருணகிரிநாதர் இசைக்காற்றிய தொண்டினை விளக்குக. (08 புள்ளிகள்)

**6.** பின்வரும் இராகங்களில் **இரண்டினைத்** தெரிவுசெய்து அவற்றின் இலட்சணங்களை விரிவாகத் தருக.

(i) ஸிம்மேந்திர மத்திம இராகத்தின் நேர்சுத்தமத்திம இராகம்

(ii) வஸந்தா

(iii) ஸகரிகமபதபஸ் - ஸ்நிதபமகரிஸ எனும் ஆரோஹண அவரோஹணத்தை உடைய இராகம்

(iv) ஆபோஹி (02 × 10 = 20 புள்ளிகள்)

**7.** (i) ஹிந்துஸ்தானி இசையில் வில் கொண்டு வாசிக்கப்படும் தந்தி வாத்தியத்தையும் மேலைத்தேய இசையில் மெட்டுக்களை உடைய தந்தி வாத்தியத்தையும் பெயரிடுக. (02 புள்ளிகள்)

(ii) மேலே (i) இல் பெயரிட்ட வாத்தியங்கள் ஒவ்வொன்றினையும் வாசித்துப் பிரபல்யம் அடைந்த கலைஞர்கள் இருவர் வீதம் பெயரிடுக. (04 புள்ளிகள்)

(iii) மேலே (i) இல் பெயரிட்ட இரு வாத்தியங்களினதும் அமைப்பினைத் தனித்தனியே விவரிக்குக. (06 புள்ளிகள்)

(iv) மேலே (i) இல் பெயரிட்ட இரு வாத்தியங்களிலும் காணப்படும் சிறப்பம்சங்களைத் தனித்தனியே விளக்குக. (08 புள்ளிகள்)

**8.** 20ஆம் நூற்றாண்டில் இலங்கையின் கர்நாடக இசை வளர்ச்சி பற்றி விளக்குக.

**அல்லது**

பாடசாலைக் கலைவிழாவில் இசைநிகழ்ச்சி ஒன்றினை நடாத்துவதற்குத் தயார்படுத்தவேண்டிய செயலொழுங்குகளை விவரிக்குக. (20 புள்ளிகள்)


* * *

LOL
Book Store

වාරෙටම ඕන කරන පොත් එකපාර
ඕඩර් කරලා දැන් ගෙදරටම ගෙන්වා ගන්න

# 25% OFF ALL BOOKS

Including Exercise Books,
CR Books, and B5 Books




**ඕනෙම අභ්‍යාස පොතකට 25%ක විශේෂ වට්ටමක්**

## ORDER BOOKS FROM LOL BOOKS STORE

0372060110 **WWW.LOL.LK**

071 777 4440 (WhatsApp)

**Cash On Delivery Available**


ORDER GCE A/L
SHORT NOTES, MODEL,
REVISION BOOKS & PAST
PAPERS IN SINHALA, ENGLISH
& TAMIL MEDIUM
LOL
BOOK
STORE
CASH ON DELIVERY
AND KOKO PAYMENT
AVAILABLE
WHATSAPP - 0717774440
WEBSITE: WWW.LOL.LK
GET READY FOR YOUR A/Ls
WITH LOL BOOK STORE!